திருக்கிறது. ஆகையால் அதற்கான உத்தேச மதிப்பீடு எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, குடிநீர் கொடுக்கிறேன் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறேனே தவிர எந்தத் தேதி யில் கொடுக்கிறேன் என்று சொல்லவில்லை. ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம், வத்திரா யிருப்பு பேரூராட்சிக்கு குடிநீர்த் திட்டம் தயாரிப்பு தொடர்பாக தகுந்த நீர் ஆதாரத்தைக் கண்டுபிடிப்பதில் தாமதம் ஆனதால் அந்தத் திட்டத்திற்கான உத்தேச மதிப்பீடு தயாரிப்பதில் தாமதம் ஏற்படுகிறது. அதற்குரிய களப் பணிகள் தற்போது முடிவுபெற்றுள்ளன ; முடிந்தவுடன் மதிப்பீடு தயாரிக்கப் பட்டு வருகிறது. இந்தக் குடிநீர்த் திட்டத்திற்கு உத்தேச மதிப்பீடு மேற் பார்வை பொறியாளர், தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம், (இராமநாதபுரம், புதுக்கோட்டை, மதுரை) இடமிருந்து கிடைத்தவுடன் பரிசீலித்து, அரசு ஒப்புதல் வழங்கும்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அங்கு குடிநீர் திட்டம் தீட்டப்பட்டு, அது 'ஃபெயில்யூர்' ஆகி விட்டது. ஏனென்றால் சாக்கடை நீரும், குடிநீரும் ஒன்றாக கலந்து, மக்கள் விவரம் தெரியாமல் சாக்கடைத் தண்ணீரைக் குடித்துக் கொண்டிருந்தார்கள். ஆகவே, இத் திட்டத்தை ஆரம்பிக்கும்போது குடிநீர்க் குழாயைத் தனி யாகவும், சாக்கடைக் குழாயைத் தனியாகவும் போட ஏற்பாடு செய்யப்படுமா? அதற்கு மதிப்பீடு எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, ரூபாய் மதிப்பீடு இன்னும் வரவில்லை என்று சொன்னேன். வந்தவுடன் அரசு ஒப்பு தல் வழங்கும். அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி யில் குடிநீர் என்றால் அது குடிநீராகத்தான் இருக்கும். அதுவும் நன்றாகப் பாதுகாக்கப்பட்ட குடிநீராகக் கொடுப்போம் என்று இந்த நேரத்தில் தெரி வித்துக்கொள்கிறேன்.

உள்ளாறு அணைத் திட்டம்

*வினா எண் 869—திரு ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாசுதேவநல்லூர் உள்ளாறு அணைத்திட்டத்தின் முக்கியத்துவம் பற்றி நெல்லை மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் தீர்மானம் போடப் பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

1979 ஏப்ரல் 28]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) வாசுதேவநல்லூர் உள்ளாறு அணைத் திட்டத்தின் முக்கியத்துவம் பற்றி நெல்லை மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றியது சம்பந்தமான தகவல் அரசிடம் இல்லை.

(ஆ) இத் திட்டம் 8,160 ஏக்கருக்கு பாசன உறுதியும், 2,630 ஏக்கர் ஆயக்கட்டு நிலத்திற்குப் பாசன வசதியும் அளிப்பதுடன், 810 ஏக்கர் ஒரு பாசன ஆயக்கட்டு நிலத்திற்கு இருபாசன வசதியும் அளிக்க வழி வகை செய்யும். இத்திட்டத்தின் மூலம் ராஜசிங்கப்பேரி ஏரி ஆயக்கட்டுதாரர்களுடைய முறைப்பாசன உரிமை பாதிக்கப்படும் என்று ஏற்கனவே வழக்கு நடைபெற்றுக் கொண்டிருப்பதால் அதன் முடிவு தெரியும் வரை இத்திட்டத்தின் ஆய்வு தள்ளிப் போடப்பட்டுள்ளது.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே ஒரு வழக்கு இருப்பதாகச் சொல்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட குளத்தைச் சேர்ந்தவர் வழக்கு போட்டதால் இந்தத் திட்டத்தைத் தள்ளிவைப்பது சரியா ? அதனால் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் பாதிக்கப்படுகிறது. குறிப்பாக கதிர் வரக்கூடிய காலத்தில் கூட தீய்ந்து போகக் கூடிய பரிதாபகரமான நிலைமை ஏற்படுகிறது. ஆகையால், அந்தப் பகுதி ஏராளமான நெல் விளையும் பூமியாக இருப்பதால், அதற்கு உடனடியாக ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-20]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு நல்ல வழக்கறிஞர். சட்டப் பிரச்சினைகள் எழுகின்ற நேரத்தில் அந்தத் திட்டத்தை தொடர்ந்து நடத்தாமல் சட்டப் பிரச்சினைகள் முடிந்து வழக்கு மன்றத்திலேயிருந்து தீர்ப்பு கிடைத்தவுடன் அதைத் தொடர்ந்து நடத்துவது தான் நல்லதாக இருக்கும் என்ற அடிப்படையில் தான் இப்படித் தள்ளிப் போடப்பட்டிருக்கிறது.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, ஏற்கெனவே இந்த வழக்கு தீர்ந்துவிட்டதாக நான் அறிகிறேன். அது ஒரு பக்கம் இருக்கட்டும். அதற்கு மேற்கே செண்பகவல்லி அணைக்கட்டு இருக்கிறது. அது கோளமாநிலத்தின் எல்லையிலே அமைந்திருக்கின்றது. அது உடைந்து சேதம் அடைந்து விட்ட காரணத்தால் தண்ணீர் பூராவும் மேற்கு நோக்கி ஓடுகின்றது. இதற்காக சில இலட்சங்களை மட்டும் செலவு செய்தால் அந்தத் தண்ணீரை இந்தப் பகுதியிலுள்ள குளங்களுக்குக் கொண்டுவர முடியும். அப்போது ஏராளமான நீர் கிடைக்கும். ஆகவே அதை உடனடியாகச் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

இது குறித்து அமைச்சரவர்களிடம் ஏற்கெனவே சொல்லி இருக்கிறேன். ஆகவே உடனடியாக ஏற்பாடு செய்வதற்கு இதனைப் பரிசிலனை செய்து ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, அரசு அது பற்றிப் பரிசீலனை செய்யும்.

திரு. ர. ஜெபமணி : தலைவரவர்களே, நான் கேள்வி கேட்கவில்லை. இப்போது இந்தக் கட்டிடம் இடிந்து ஒருவர் கீழே விழுந்திருக்கின்றார். அந்த நிகழ்ச்சி நம் பக்கத்திலேயே நடைபெற்றிருக்கிறது. ஆகவே ஒருவேளை நாம் இருக்கும் இந்தக் கட்டிடத்திற்கும் ஆபத்து வந்துவிடக் கூடாது. ஆகவே உடனடியாக அதைக் கவனிப்பதற்கு மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் உத்தரவிடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை கவனித்து உடனடியாக அவைக்கு நான் தகவல் தெரிவிக்கிறேன்.

பல்லகச்சேரி ஏரிப்பாசனப் பகுதி

***வினா எண் 870—திரு. செஞ்சி இராமச்சந்திரன் :** மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சி வட்டத்தில் கட்டப் பட்டுள்ள கூளாங்குறிச்சி அணையினால் பல்லகச்சேரி கிராமத்திலுள்ள ஏரிப் பாசனப் பகுதி பாதிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்கு மாற்றுத் திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

தமிழ்நாடு கைவினைப்பொருள் அபிவிருத்திக் கழகத்தின் விற்பனை நிலையங்கள்

***வினா எண் 871—திரு. எஸ். கணேசன் :** மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கைவினைப்பொருள் அபிவிருத்திக் கழகம் தனது சேல்ஸ் எம்போரியங்களை எந்தெந்த மாவட்டங்களில் நடத்திவருகிறது?

(ஆ) அதை மற்ற மாவட்டங்களுக்கும் விரிவுப்படுத்த உத்தேசம் உள்ளதா?